வேளாண்மை துணை இயக்குநர்/செயலாளர், ஈரோடு விற்பனைக்குழு, ஈரோடு அவர்களின்
செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர் : திரு.சி.சின்னசாமி,பி.எஸ்ஸி.,(வே).,எம்.பி.ஏ.,

ந.க.எண். அ1/4475/2017 நாள்: 30.03.2019

பொருள் : பணிக்குழு - தமிழ்நாடு அமைச்சுப்பணி - ஈரோடு விற்பனைக்குழு - அலுவலக உதவியாளர் பதவியிலிருந்து இளநிலைஉதவியாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டமை - இளநிலைஉதவியாளர் பதவியில் பணிவரண்முறை செய்து ஆணையிடுதல் - தொடர்பாக.

பார்வை : 1.அரசாணை நிலை எண்.43, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை நாள்: 15.02.1994.
2.அரசாணை நிலை எண்.123, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை நாள்: 19.09.2009.
3.அரசாணை நிலை எண்.470, வேளாண்மை (வே.வி.III)துறை, நாள்: 05.07.1989.இவ்வலுவலக செயல்முறை இதே எண். நாள்: 17.07.2015.
4.இவ்வலுவலக இதே எண்ணிட்ட செயல்முறை ஆணை,நாள்: 27.03.2018.

----------

**ஆணை :**

ஈரோடு விற்பனைக்குழுவில் பார்வை (4)இல் காணும் செயல்முறை ஆணையின் தொடர்ச்சியாக இளநிலை உதவியாளர்களாகத் தற்காலிக அடிப்படையில் பதவி உயர்வு செய்து பணி நியமனம் செய்யப்பட்ட கீழ்க்குறித்த பணியாளர்களின் பணியினை அவர்களுக்கெதிரே கலம் (4)இல் குறிப்பிட்ட தேதி முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரண்முறை செய்தும் தொடர்ச்சியான மூன்று ஆண்டுகளில் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தில் வைத்தும் ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | பணியாளர் பெயர், பதவி மற்றும் தற்போதைய பணியிடம் | இளநிலைஉதவியாளர் பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | திரு.சு.ரமேஷ், இளநிலைஉதவியாளர், ஒழுங்குமுறை விற்பனைக்கூடம், புஞ்சை புளியம்பட்டி. (கூடுதல் பணி: தலைமை அலுவலகம்) | 27.03.2018 முற்பகல் | 27.03.2018 முற்பகல் |
| 2 | திரு.சி.ரங்கநாதன், இளநிலைஉதவியாளர், ஒழுங்குமுறை விற்பனைக்கூடம், சத்தியமங்கலம். (மாற்றுப்பணி: தலைமை அலுவலகம்) | 27.03.2018 பிற்பகல் | 27.03.2018 பிற்பகல் |

மேற்குறிப்பிட்ட பணியாளர்கள் தகுதிகாண் பருவ காலத்திற்குள் 1)துறைத்தேர்வு, 2)தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை தேர்வு ஆகிய தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டுமெனவும், பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் உரிய காலத்தில் மேற்சொன்ன தேர்வுகளில் தேர்ச்சி பெறத் தவறினால், அவரது தகுதிகாண் பருவம் அரசு விதிகளின்படி நீட்டிக்கப்படும் எனவும், மூன்றாண்டு காலத்திற்குள் பவானி சாகர் அடிப்படை பயிற்சி பெற்று தகுதிகாண் பருவம் முடிக்கத் தவறினால் அரசிடமிருந்து விதித்தளர்வு பெற வேண்டுமெனவும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

30/3/19

வேளாண்மை துணை இயக்குநர் /
செயலாளர்,
ஈரோடு விற்பனைக்குழு,
ஈரோடு.

30/3/19

30.3.19

பெறுநர் (வழிமுறையாக)
மேற்குறிப்பிட்ட பணியாளர்கள்.

**நகல் :**

1.விற்பனைக்கூடக் கண்காணிப்பாளர்கள்,
ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்,
புஞ்சை புளியம்பட்டி மற்றும் சத்தியமங்கலம்.
2.பணிப்பதிவேட்டிற்கு (2).

**நகல் சமர்ப்பணம் :**

ஆணையர்,
வேளாண்மை விற்பனை மற்றும்
வேளாண் வணிகம்,
சென்னை.